**தலைப்பு 24 – தேசிய கொள்வனவு ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிடுகின்றேன்.

முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என வெளிப்படுத்த முடியாது. அதன் காரணமாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மைகள்** | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 156 (இ) (2) உறுப்புரை** | ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளிடையே விலைக்கேள்வியாளர்களுக்கு கேள்வி அழைப்பு நடைமுறைக்கு பங்குபற்றும் பொருட்டு சமனான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்து பொருத்தமான அதிகாரிகளுக்கு | அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | நிலவும் பதவியணி போதுமானதாக இல்லாதிருந்தமையின் அடிப்படையில் இதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் வழிமுறையாக்கப்பட்ட விசாரணை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் குழு ஒன்றின் அங்கத்தவராக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கையிடுதலை போன்றே பெறுகைகளுக்கு தொடர்புடைய வழங்கல் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அங்கத்தவர்களுக்கு பொருத்தமானவாறு தகைமை உள்ளதா என்பது தொடர்பில் அறிக்கை சமர்பித்தல் வேண்டும். எனினும் அந்தப் பணி இடம்பெற்றிருந்தது கிடைத்த முறைப்பாடுகளுக்கு மாத்திரம் ஆகும். | | தகைமையினை அறிமுகம் செய்ய எதிர்ப்பார்க்கிறேன். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை** | | | |
| i. | நிதிப்பிரமாணம் 835 (2) (எ) | நடப்பாண்டின் நிதியேற்பாடுகளை விஞ்சும் வகையில் வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| ii. | நிதி பிரமாணம் 835 (3) | ஆணைக்குழுவினால் கட்டிட உரிமையாளர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் | -மேற்படி- | அலுவலக தாமதமொன்று என்பதனை கவலையுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | **2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை** | உரிய முறையில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராததுடன் பதவியணியில் நிலவும் திறன்கள் மற்றும் காணப்பட வேண்டிய திறன்கள் ஆகியவற்றிற்கிடையே இடைவெளி இனங்காணுவதற்காக பொருத்தமான நடைமுறையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு பதவியணி உத்தியோகத்தருக்கும் வருடாந்தம் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பங்கள் பங்குபற்ற வேண்டிய போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் உள்ள 27 பேரினை கொண்ட நிரந்தர பதவியணியின் 6 அங்கத்தவர்களுக்கு மாத்திரம் பயிற்சி சந்தர்ப்பங்கள் | மனிதவள அபிவிருத்திக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். ஆணைக்குழு புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இந்தப் பணி பின்னடைந்நதுள்ளது. எதிர்காலத்தில் அதன் பிரகாரம் செயற்படுவேன் என அறிவிப்பதுடன் உத்தியோகத்தர்களின் பயிற்சி தேவைப்பாடுகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

ஒழுங்கமைக்கப்பட்
டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 05 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 50 முதல் 332 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | கூடியளவு சரியானதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மின்சாரம் மற்றும் நீர் இற்காக நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமை, செயற்பாட்டு குத்தகை சுற்றறிக்கை 2018 ஆம் ஆண்டிய போது இரத்துச் செய்யப்பட்டமை, வாடகை செலுத்துவதற்காக போதியளவான நிதியேற்பாடு இல்லாதிருந்தமை, பத்தரமுல்ல புதிய கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகள் மற்றும் தொலைபேசி கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக நிதி ஏற்பாடுகள் போதியளவில் இல்லாதிருந்தமை மற்றும் புதிய பெறுகைகள் வழிகாட்டி கோவை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டமை தாமதமாகியது ஆகிய காரணங்களால் பயிற்சி செயலமர்வுகள் இடம்பெறாமை போன்ற காரணங்களால் இந்த வேறுபாடு இடம்பெற்றுள்ளது. |
| (ஆ) 11 செலவின விடயங்களுக்கான தேசிய நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 15,642,000 ஆக இருந்ததுடன் செலவினம் ரூபா 7,306,643 ஆனமையால் சேமிப்பு ரூபா 8,335,357 ஆகும். | -மேற்படி- | ஆணைக்குழுவின் பணிகள் எதிர்பார்க்கப்பட்டவாறு 2018 ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தமையால் இந்த நிதி ஏற்பாடுகள் எஞ்சியுள்ளது. |

இந்த சேமிப்புகள் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கு ஒப்பாக 32 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிலவின.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் செயற்பணிக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகள், தகவல்கள் கட்டமைப்பு மற்றும் மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் தொடர்பிலான வழிகாட்டல்களுக்காக 2019 மே மாதமளவிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | உரிய செயற்பணியை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் கையளிக்கப்படும் சட்ட கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். | இந்த நடைமுறை தாமதமாகியமை பெறுகைகள் ஆணைக்குழுவினால் எந்த வகையிலும் தடுத்துக்கொள்ள முடியாமைக்கான காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளமையை அறிவிக்கின்றேன். |

### 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம் 2014/01 உடைய அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய உள்ளக கணக்காய்வு திட்டம், வருடாந்த பெறுகைகள் திட்டம், வருடாந்த பணிகளுக்கான கட்டுநதி தேவைப்பாட்டு திட்டம், நிறவன கட்டமைப்பு மற்றும் பதவியணி தொடர்பான விபரம் | சுற்றிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வாளருக்கு இது நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிராமையால் உள்ளக கணக்காய்வொன்று இடம்பெறாததுடன் வருடாந்த பெறுகைகள் திட்டம், வருடாந்த பணிகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், நிறுவன கட்டமைப்பு |

| | | |
|---|---|---|
| போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | மற்றும் பதவியணி போன்ற பதிவேடுகளின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. |

## 3.3 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பின்வரும் பணிகள் மீளாய்வாண்டினுள் வெற்றிகரமாக நிறைவேற்றத் தவறியிருந்ததது. | | |
| (அ) நிறைவேற்று தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை தயாரித்தல் | திட்டமிடப்பட்ட பணிகள் உரிய கால அட்டவணையினுள் நிறைவேற்றப்பட வேண்டும். | சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை அங்கீகாரத்திற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிற்கான அனைத்து அமைச்சுக்களின் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் பெறுகைகள் திட்டங்களை சேகரித்தல். | -மேற்படி- | இணங்குகின்றேன். 43 அமைச்சுக்களின் 54 செயல்நடவடிக்கைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய அமைச்சுக்களின் செயன்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்படுகிறது. |
| (இ) பெறுகைகள் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணக்குகிறதா என்பதை பரீட்சித்தில். | -மேற்படி- | இணங்குகின்றேன். தெரிவு செய்யப்பட்ட 07 அமைச்சுக்களிலுள்ள 13 நிறுவனங்களின் பணிகள் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்குகுகிறதா என்பதை பரீட்சிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பதவியணி காரணமாக இந்த பணி பின்னடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் வியாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பெறுகை பணிகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டினுள் கிடைத்திருந்த 151 முறைப்பாடுகளில் 67 இணை பரீட்சித்து அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் 10 இன் விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. 27 இன் தகவல்கள் கோரலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | இணங்குகின்றேன். |
| (உ) | ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் சில பெறுகை நடவடிக்கைகளை விரிவாக பரிசோதித்தல். | -மேற்படி- | இணங்குகின்றேன். இந்த நடைமுறை வெளிவாரி மதியுரையாளர்களின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதியேற்பாட்டிற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் எதிர்காலத்தில் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருட் பதிவேட்டு புத்தகத்தின் மற்றும் நுகர்வு பொருட்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய பொருட்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பொருள் வகைகள் வெவ்வேறாக இனங்காணுதல் மூலம் சொத்துக்கள் முகாமைத்துவத்திவம் இலகுபடுத்தப்பட வேண்டும்.<br><br>பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| வில்லை. | | |
| (ஆ) பொருட்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் குறித்த பொருள் கிடைத்துள்ளமையை உறுதி செய்வதற்கு இலகுவான முறையில் பொருட் பெறுவனவு குறிப்பு (GRN) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் குறித்த பொருட்கள் கிடைத்ததாக உறுதிப்படுத்துவதற்கு உரிய நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும். | கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பொருட்களும் கிடைத்த பின்னர் அவை பொருளிருப்பு / நுகர்வு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரம் அந்த பொருட்களுக்கு உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும். அதற்கு மேலதிகமாக பெறுவனவுகளுக்காக (GRN) விநியோகித்தலும் இடம்பெறும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஜுலை 31 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்திச் செல்லப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலகத்திற்காக மாதாந்த வாடகை ரூபா 931,834 ஆன போதிலும் பத்திரமுல்லயில் அமைந்துள்ள புதிய அலுவலக கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 2,028,600 ஆகும். பழைய அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் போது மேற்கொள்ள நேர்ந்திடாத போதிலும் புதிய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு வந்தமையின் காரணமாக மின்சாரம், சுத்திகரிப்பு, நீர் மற்றும் பாதுகாப்பு போன்ற செலவினங்களுக்காக 2018 ஆகஸ்ட் மாதம் முதல் | செலவிடப்படும் தொகைக்கு உச்ச செயலாற்றலினை கைப்பற்றுறவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பண்மாரநாயக்க மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்திருந்த இரண்டு கட்டிடங்களின் ஆறு இடங்களின் முழு இட அளவானது 2231 கன அடிகளான இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான வாடகை மாதாந்தம் கன அடி ஒன்றிற்காக ரூபா 375.00 ஆகும். ( வரி நீங்கலாக)<br><br>அது முன்னாள் பதவியணிக்கும் போதியதாக இல்லாதிருந்ததுடன் ஆணைக்குழுவின் தலைவருக்கும் பயன்படுத்துவதற்கு நேர்ந்தது பொது மலசலகூடம் மற்றும் பொது நீர்நிலை என்பதை அறிவிக்கின்றேன். இடவசதி குறைவடைந்தமையால் மாநாடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் மாதம் வரையான 5 மாத காலப்பகுதிக்காக ரூபா 1,885,496 ஆன மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | | நடாத்துவதற்காக வெளியிலிருந்து இடவசதியை பெற்றுக்கொள்ளவும் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் முடியாதிருந்தது. அலுவலக பணிகளை நிறைவேற்றும் போது பல்வேறு சிக்கல்கள் உருவாகியிருந்தன. |
| (ஆ) | மேற்படி கட்டிடத்தினை வாடகைக்கு எடுப்பதற்காக 2017 செப்தம்பர் 27 ஆம் திகதிய வெளியிடப்பட்டிருந்த பத்திரிக்கை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இடவசதியின் அளவு 6000 கன அடிகளாகவும், 2018 சனவரி மாதத்தில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலின் பிரகாரம் தேவையான கன அடியின் அளவானது 8500 / 10500 இற்கு அளவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் ஆணைக்குழுவினால் நகர அபிவிருத்தி அதிகார சபையில் கோரப்பட்டிருந்த 1500 -2000 கன அடிகளுக்கு இடைப்பட்ட இட அளவானது தொடர்பிலாகும். எவ்வாறெனினும் தற்போது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கட்டிடம் 13,400 கன அடிகளாக உள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 50 மற்றும் உள்ளபடியான பதவியணி 27 மாத்திரம் ஆகும். எனினும் ஆணைக்குழுவிற்காக 13,400 கன அடிகள் அளவில் 12,000 கன அடியொன்றிற்கான (பெறுமதி சேர் வரி நீங்கலான விலைக்கு) ரூபா 147 படி மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்ட | மேற்படி | கட்டிடத்தின் நில அளவானது 8500 / 10500 கன அடிகளுக்கு கிட்டியதாக உள்ளமை மற்றும் ஆகக் குறைந்தது 10 வாகனங்களையேனும் நிறுத்தி வைக்கும் இயலுமையும் கருத்திற் கொள்ளப்பட்டது.<br><br>வயோதிபர்களுக்கு பயன்படுத்துவதற்கு சிக்கலாகக்கூடும் என்றமை மற்றும் வாடகை தொகையின் நியாயத் தன்மையை கருதி முழு கட்டிடமும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (இ) | புதிய கட்டிடத்திற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை பெறுமதி ரூபா 1,600,000 ஆக இருந்ததுடன் இந்த மதிப்பீட்டினை மிஞ்சி மாதமொன்றிற்காக செலுத்தப்பட்ட வாடகை தொகை ரூபா 164,000 ஆகும். அதற்கமைய வருடமொன்றிற்காக அவ்வாறு கூடுதலாக செலுத்துவதற்கு நேர்கின்ற தொகை ரூபா 1,968,000 என்பது அவதானிக்கப்பட்டது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வாடகை செலுத்தப்பட வேண்டும். | புதிய கட்டிடத்தின் மதிப்பீட்டு பெறுமதியும் கட்டிடத்தின் உரிமையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள கூறு விலைகளிவும் வேறுபாடு உள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் முக்கியத்துவம் மற்றும் சுற்றியுள்ள அலுவலகங்களுக்கு உரிய வாடகையினை கருத்திற் கொண்டு அந்த வாடகை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமொன்றாக கருதாது உரிய நீதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டது. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவின் நிரந்தர பதவியணிக்கு உரிய சாரதிகள் இருவர் இருந்த போதிலும் ஒரு வாகனமொன்று மாத்திரம் ஆணைக்குழுவிற்கு சொந்தமாக காணப்பட்டது. எனினும் நிரந்தர பதவியணிக்கு உரித்தற்ற சாரதியொருவருக்கு ஆணைக்குழுவிற்கு உரித்தற்ற ஏனைய வாகனமொன்றினை செலுத்தமைக்காக 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு மாதாந்த படிகளாக ரூபா 311,456 தொகையும் 2018 மே, யூன் மற்றும் யூலை மாதங்களுக்காக மேலதிக நேர படிகளாக ரூபா 18,072 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அது வரையில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு | நிலவும் ஊழிய வழங்கலில் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் தேவையற்ற செலவினங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>சட்டரீதியற்ற மற்றும் உரித்தற்ற கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் குறித்த பணத்தை மீள அரசிற்கு அறவிட வேண்டும். | 2018.08.01 வரை இந்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை ஒன்று ஆனதுடன் நிரந்தர பதவியணியின் இரு சாரதிகள் இருந்தனர். ஒரு சாரதி தலைவருக்கும் மற்றைய சாரதி அந்த சாரதி விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மற்றைய வாகனங்கள் இல்லாதிருந்த காரணத்தால் தனிப்பட்ட மோட்டார் காரினை ஓட்டுவதற்குரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சாரதி தற்காலிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டார். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனமொன்று இல்லாதிருந்த நிரந்தர பதவியணிக்கு உரிய சாரதியொருவருக்காக அந்த காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன.<br><br>2018 மே மற்றும் ஜூன் ஆகிய மாதங்களுக்காக சாரதிக்கு படிகள் மற்றும் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டுள்ள போதிலும் மேற்படி வாகனத்தினை பயன்படுத்திய உத்தியோகத்தர் அந்த காலப்பகுதியினுள் சுகயீன விடுமுறை பெற்று கடமைகளுக்கு சமூகமளித்திருக்கவில்லை என அறிக்கையிடப்பட்டிருந்தது. | | பிரதம செயலாளர் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டமையால் குறித்த மருத்துவரால் 2018-04–30 முதல் ஜூலை 30 வரை விடுமுறை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் தலைமை செயலாளர் 2018–05–22 ஆம் திகதி மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருந்தமையை தெரிவிக்கின்றேன். |
| (உ) | ஆணைக்குழுவின் அலுவலகம் அமைந்துள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் இட வசதி ஒதுக்கீட்டு பணிகள் மற்றும் தொலைபேசியினை பொருத்துதல் ஆகியவற்றிற்காக 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,338,205 ஆன தொகை இலக்கம் 024–01–01-2001 (கட்டிட புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல்) ஆம் இலக்க மூலதன செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த செலவினத்தினுள் அரசின் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் இடம்பெற்றிராமையால் | சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் இடம்பெறாமையால் சிக்கனமான முறையில் ஆகக் குறைந்த கிரயத்தின் அடிப்படையில் உரிய பணிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | முழு கட்டிடத்திற்கும் உரிய உள்ளக தொலைபேசி கட்டமைப்பொன்றினை பொருத்துவதற்காக ஒவ்வொரு தளத்திற்கும் அலுவலக பணிகளை விரிவாக்கும் முறையில் உரிய உச்சவெளி தொலை வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு இயலுமான வகையில் அதற்கு தேவையான கதிரைகளை (loop) பொருத்துதல், வலைமைப்பிற்கு உட்படுத்துதல் போன்ற பணிகள் போன்றே 05 மற்றும் 04 ஆம் தளங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கான செலவினத்திற்கு இந்த செலவினத்தினுள் உள்ளடங்கியுள்ளது. அந்த செலவினங்கள் அலுவலக இட ஒதுக்கீட்டுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக கருத முடியாது. |

அதனை மூலதன செலவீனமாக கருதுதல் பிரச்சினைக்குரிய விடயமொன்றாகும். மேலும் ஆகக்குறைந்த கிரயத்தின் அடிப்படையில் அந்த பணிகள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்படவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக தேசிய பெறுகைகள் திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்குரிய 17 நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு உரிய தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் பணிகளுக்கு உரியதாக அரச பெறுகைகளில் இடம்பெறும் பணிப்பொறுப்பினை கருத்திற்கொண்டு மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இயலுமான வகையில் பெறுகைகள் வழிகாட்டி மற்றும் கைநூல் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பெறுகைகள் வழிகாட்டி மற்றும் கைநூல்களின் வரைபுகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறெனினும் நிலைபேறான அபிவிருத்திக்குரிய 17 நோக்கங்களை கருத்திற்கொள்ளும் போது தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் செயற்பணி ஒரு நோக்கத்திற்கு அல்லது சிலவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட முடியாதென்பதையும் அந்த |

| | | |
|---|---|---|
| | | நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40 (01) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிராததுடன் அதிகாரச்சட்டத்தின் 41 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட வேண்டியமை மற்றும் உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்துதல். | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஆணைக்குழுவின் அங்கீகரித்த பதவியணி 51 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 27 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 24 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள 07 பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் நபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |